களம்-19 வெற்றி-3

இலஞ்சம் தவிர்! நெஞ்சம் நிமிர்!

மார்ச் 2021

# நேர்மை நெறி

[ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்]

Regd.No.349/2001

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையகத்து இறந்தாரை எண்ணிக்கொண் டற்று".

# (NAERMAI NERI)

ரூ.10/-

## இலவசங்கள், தள்ளுபடிகள் அனைத்தும் நம்மிடமிருந்து மீண்டும் வரியாகவோ, இலஞ்சக்கொள்ளையாகவோ பல மடங்கு நம்மிடமிருந்து பறித்துக்கொள்ளப்படும்..




## லஞ்சம் = சாபம்

PUBLISHED BY

ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

பதிவு மற்றும் செயல் அலுவலகம் : 155, "நம்பகம்"
கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை - 600 023.
Cell : 8778312823
e-mail : acmchennai2001@yahoo.co.in
Website : anticorruptionchennai.com

## தலைவர் மடல்

**அன்பார்ந்த உறுப்பினர் சகோதர சகோதரிகளே!**

**வணக்கம். இம்மடல் மூலம் மீண்டும் உங்களை தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.**

**எச்சரிக்கை:** அன்பார்ந்த உறுப்பினர்களே, நமது இயக்கம் ஏற்கெனவே இரு நிர்வாகிகளை கோவிட்-19 வைரசுக்கு பலி கொடுத்துவிட்டது. கொரோனாவால் இனி ஒரு பலி கூட இருக்கக்கூடாது. கோவிட்தான் மிகவும் குறைந்துவிட்டதே என எண்ணி விட வேண்டாம். இதன் வீரியம் எப்போது எப்படி மாறும் என்பது மருத்துவ உலகுக்கே சவாலாக உள்ளது. எனவே, ஒவ்வொரு உறுப்பினரும், கோவிட்-19லிருந்து பாதுகாத்துக்கொள்ள, தடுப்பு ஊசியை உடனடியாக போட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். தடுப்பூசி போட்டுக் கொண்டாலும், தொடர்ந்து அரசு அறிவித்துள்ள பாதுகாப்பு நெறிமுறைகளைக் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டுகிறோம்.

**தேர்தல் அவலங்கள்:** தேர்தலில் வெற்றி பெற்றே தீரவேண்டும் என்று 10 ஆண்டுகளுக்குமேல் காத்துக் கொண்டிருக்கும் தமிழகத்தைப் பாழாக்கிய கட்சியும் தமிழகத்தை கடந்த 10 ஆண்டுகளாக பாழாக்கிக்கொண்டிருக்கும் கட்சியும் போட்டி போட்டுக்கொண்டு தொடர்ந்து தமிழகத்தை பாழாக்க தேர்தலில் வெற்றி பெற வேண்டி அறிவிப்பு மேல் அறிவிப்புகளை அள்ளி வீசுகின்றன. "மாதம் தோறும் குடும்பத்தலைவிக்கு ரூ.1000/-ம் லஞ்சம் தருவோம் எங்களுக்கு வாக்களியுங்கள்" என்று தமிழகத்தை பாழாக்கிய கட்சியும், "இல்லை

---

இயக்கத்தின் ஆரம்பம் முதல், தன் வாழ்நாள் வரையில், தலைவர் : அமரர் **திரு.C.S.குப்புராஜ்** அவர்கள், தன் மறைவிற்கு பிறகும் தன் மகள் மூலம் கொடை வழங்கி இயக்கத்தின் வளர்ச்சிக்கு வித்திடுகிறார்.


வாய்மையே வெல்லும்

**நீலா கண் மருத்துவகம்**

**Dr.ஜெயந்தி ஆனந்தன், MBBS., D.O.,**

21, நல்லப்பன் தெரு, மைலாப்பூர், சென்னை - 600 004.

**போன் : 044-24642755 / 9884245069**

**பார்க்கும் நேரம் : திங்கள் முதல் வெள்ளி வரை**

காலை 9.30 முதல் 11.30 மணி வரை

மாலை 4.00 முதல் 8.00 மணி வரை

சனிக்கிழமை காலை 10.00 மணி

முதல் மாலை 4.00 மணி வரை

(ஞாயிறு விடுமுறை)




**தாணத்தில் சிறந்தது கண் தானம்**

இல்லை, நாங்கள் மாதம்,ரூ.1500/-ம், வருடம் ஆறு கேஸ் சிலிண்டர்களும் இலவசமாய் (லஞ்சம்) தருவோம்" என்று எதிர்த்துக்கூறி தமிழகத்தை பாழாக்கிவரும் கட்சியும் அறிக்கை விடுகிறது. தமிழக நிதி நிலையோ சுமார் 5.00 லட்சம் கோடிக்கும் மேல் கடன் சுமையில் உள்ளது. அதாவது, சுமார் 7 கோடி மக்களுக்கும் ரூ.5.00 லட்சம் கடன் உள்ளது. அதாவது தலைக்கு சுமார் ரூ.70,000/-ம், ஒரு குடும்பத்திற்கு நால்வர் என்று கணக்குப்போட்டால், ஒரு குடும்பத்திற்கு எற்பட்ட கடன் சுமையோ ரூ.2.80,000/-. அதாவது சுமார் ரூ.3,00,000/-. இக்கடன் சுமையை தமிழகத்தை பாழாக்கிய கட்சியும் பாழாக்கிவரும் கட்சியும் மக்கள் மீது எற்படுத்தியுள்ளன. இந்தக் கேவலத்திற்கு வால் பிடிக்க ஆயிரக்கணக்கில் கூட்டம் கூடுகிறது. கோடிக்கணக்கான மக்கள் ஏன் இவர்களுக்கு வாக்களிக்கிறார்கள்? இந்த இரு கட்சிகளுக்கு மட்டும் சுமார் 60 சதவீத வாக்கு வங்கி இருப்பது தெரிகிறது. ஆக தமிழ் நாட்டிலுள்ள பெரும்பான்மை மக்கள் இந்த கட்சிகளின் சுரண்டல்களை மனப்பூர்வமாக ஆதரிக்கின்றனர் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

இந்த இரு கட்சிகளின் சுரண்டல்களால் மக்கள் குடிக்கத் தண்ணீர் இன்றி 2019ம் ஆண்டில் சொல்லொண்ணாத்துயரம் அடைந்தார்கள். ஆனால் அவற்றிற்கான காரணம் இந்த இரு கட்சிகள் தமிழகத்தை சூரையாடியதே. இருப்பினும் மக்கள் இந்த இரு கட்சிகளையே மாறி மாறி தேர்வு செய்கின்றனர். இதை கூர்ந்து ஆராயின், சரியான மாற்று இல்லை என்பதே காரணம் என்று தோன்றுகிறது. நான் மாற்றம் தருகிறேன் என்ற விஜயகாந்த் மக்கள் ஆதரவு இருந்தும், அதிமுக விடம் விலை போனார். கொள்கைகள் காற்றில் சென்று விட்டது. ஜெயிக்க வேண்டும் என்ற வெறியில், ஊழல் கட்சிக்கு துணைபோனார். ஆனால் மக்கள் தூக்கியெறிந்து விட்டனர். ஊழலற்ற ஆட்சி தருவேன் என்று வாய்கிழிய பேசும் திரு.கமலஹாசன், "நான் மாதம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதம் ரூ.5000/- தருவதாக அறிவிக்க விருந்ததில் ரூ.1000/-ஐ திருடி திமுக வும், ரூ.1500/-ஐ திருடி அதிமுகவும் அறிவித்துவிட்டன" என்று அறிக்கை விடுகிறார். திரு. சீமானோ, "தமிழன்" என்ற உனர்வுப் பூர்வமாக இளைஞர்களை உசுப்பேற்றி வருகிறார். ஆக, நல்லாட்சி தருவதாகவும் அதை எவ்வாறு தரமுடியும் என்றும் அறிவுப்பூர்வமாக கொள்கை கொண்ட கட்சிகள் இல்லை என்பதும், பதவி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அதையடைய மக்களிடம் எது எடுபடும் என்று கருதி, அவ்வாறாக மக்களை மயக்க முயற்சிப்பதே "மாற்றம் தருவோம்" என்று கூறும் கட்சிகளின் நிலையாக உள்ளது. ஆக தமிழகத்திற்கு விடிவு காலம் என்பது கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இல்லை என்பது வெட்ட வெளிச்சம்.

கொள்ளையடிப்பதை பயனற்றதாக்கச் செய்தால் மட்டுமே இந்த கொள்ளையடிக்கும் ஆசை மக்களிடம் குறையும். எனவே-

(அ) அனவருக்கும் எல்லா நிலையிலும் ஒரே தரத்திலான இலவசக்கல்வி.

(ஆ) எல்லா வியாதிகளுக்கும் பாகுபாடற்ற இலவச மருத்துவ சிகிச்சை.

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன்பெறுவீர்!**

விளம்பரக் கட்டண விபரம்

முழுப்பக்கம் : ரூ.2000/- அரைப்பக்கம் ரூ.1000/- கால்பக்கம் ரூ.500/-

இதழில் வெளிவருகின்ற கட்டுரைகள் விளம்பரங்கள் படைபாளிகளையே சார்ந்தது.

நேர்மைநெறி நிர்வாகமோ, ஆசிரியரோ பொறுப்பல்ல.

(இ) இலவசமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர்.

(ஈ) ஒரு குடும்பத்திற்கு குறைந்தபட்சம் சுமார் 450 சதுர அடியிலான இலவசக் குடியிருப்பு,

(உ)எந்த ஒரு இலவசத்துக்கும் உரிய கட்டாய வேலை செய்யவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் மட்டுமே கொடுக்கப்பட வேண்டும்.

ஆக, இந்நான்கு மட்டும் மக்களுக்கு உழைப்பின் மூலம் கிடைக்க அரசு வகைசெய்யின், ஊழல் செய்யும் நோக்கம் மக்களிடம் குறைய வாய்ப்பு உள்ளது. எந்த அரசியல் கட்சியும் இதுபோன்ற திட்டங்களை முன்வைக்கவில்லை. மாறாக மேலும் சோம்பேறிகளை உருவாக்கும் இலவசங்களை அளித்து மக்களை மதுபோதைக்கு அடிமையாக்கி கையேந்திகளாகவும் சிந்திக்கும் திறனற்றவர்களாகவும் வைப்பதிலேயே குறியாய் இருக்கினறன.

ஆக தமிழகத்தில் தேர்தல் களத்தில் போட்டி, கொள்ளையடித்து கொண்டிருப்பவருக்கும், கொள்ளையடிக்கத் துடிப்பவர்களுக்கும் இடையில் மட்டும்தான் போட்டி. மக்களுக்கு இந்த தேர்தலால் எந்த பலனும் இல்லை. எனவே, இந்தத்தேர்தலில் நாம் கண்டிப்பாக வாக்களிக்க வேண்டும். ஆனால் அது "நோட்டா" வுக்கு மட்டுமே இருக்க முடியும். "உறு மீன் வரும் வரை வாடியிருக்குமாம் கொக்கு" என்பது போல் நல்லவர் வரும் வரை "நோட்டா" தான் நமது கதி என்பது எமது கருத்து.

அன்புடன்,

**(ந.சுப்ரமணியன்)**

## <u>பாட்டி கதைகள்</u>

இரத்தத்திலயே ஊற வைக்க வேண்டிய விஷயம் இது* , ***நேர்மை*** ....

ஒருத்தர் தன்னுடைய இரண்டு குழந்தைகளையும் கூட்டிக்கிட்டு விளையாட்டு அரங்கத்துக்கு போனார். டிக்கெட் கவுண்டருக்குப் போய் டிக்கெட் விலை என்னன்னு கேட்டார் .

பெரியவர்களுக்கு ஐந்து ரூபாய், குழந்தைகளுக்கு ஆறு வயதுக்கு கீழ் உள்ளவர்களுக்கு டிக்கெட் இலவசம்ன்னு கவுண்டரில் இருக்கிறவர் சொன்னார்.

உடனே இவர், பெரிய பையனுக்கு ஏழு வயது ஆகிறது, சின்னவனுக்கு ஐந்துதான் ஆகிறது, அதனால் எனக்கும் பெரியவனுக்கும் மட்டும் இரண்டு டிக்கெட் குடுங்கன்னு சொன்னார்.

டிக்கெட் கொடுக்கிறவர் அவர்களை ஏற இறங்க பார்த்துவிட்டு , பெரிய பையனைப் பார்த்தா ஏழு வயசு ஆகிற மாதிரி தெரியலை, அவனுக்கு ஆறு வயசுதான் ஆகுதுன்னு சொல்லியிருந்தால் நானும் ஃப்ரீயாக விட்டிருப்பேன் , உங்களுக்கு ஐந்து ரூபாய் மிச்சமா யிருக்குமேன்னு சொல்ல....

அதுக்கு அந்த அப்பாக்காரர், நீங்க சொல்ற மாதிரி அவனுக்கு ஆறு வயசுன்னு மாத்தி சொல்லியிருந்தா, எனக்கு ஐந்து ரூபாய் மிச்சமாகியிருக்கும்தான் ... ஆனால் அதை பார்த்துக் கொண்டிருக்கும் என் மகனின் மனதில் , ஐந்து ரூபாய்காக நம்ம அப்பா பொய் சொல்றாரேன்னு என்னைப்பற்றி தரக்குறைவாக நினைக்கத் தோன்றும், மேலும் நாமும் சமயத்திற்கு தகுந்தாற்போல் பொய் சொல்லலாம் என எண்ணத் தோன்றும் .

இந்த ஐந்து ரூபாயை மறுபடியும் சம்பாதிச்சுடலாம் , ஆனா என் மகன் மனசுல இந்த மாதிரியான தீய நினைப்பு வந்துட்டா, அதை கடைசி வரை எடுக்கவே முடியாது, மேலும் எக்காரணத்திற்காகவும் பொய் சொல்லக்கூடாது, நேர்மையாக வாழ வேண்டும் என என்னைப் பார்த்து அவன் கற்றுக்கொள்ள இது ஒரு வாய்ப்பாகவே அமைந்துள்ளது என பெருமையாகச் சொல்லிட்டுப் போனார்.

(*நினைத்துப் பார்க்க வேண்டிய ஒன்று*)

# கோவில்களின் வருமானம்

-V.கார்த்திகை ராஜன்,
இயக்கப் பொதுச்செயலர்

தமிழக அரசு(கள்) நினைத்திருந்தால் அறநிலையத்துறையையும் மேம்படுத்தி நிறைய மருத்துவமனைகளைக் கட்டியிருக்கலாம்.

* பல நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த நம் ஆலயங்களைக் காப்பாற்றுவோம்!!
* இனி மக்கள் தான் விழிப்படைய வேண்டும். *உண்டியலில்* *பணம்?*
* இந்த அநியாயத்தை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும்.
* ஏன் பல நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த நம் ஆலயங்கள் பயனற்று அழிந்து போகும் நிலையில் உள்ளன??
* காரணம் என்ன???

1. பழனி முருகன் கோவிலில் பக்தர்களால் வரும் வருமானம் மட்டும் 150 கோடிகளுக்கு மேல்.
2. திருவள்ளூர் வீரராகவன், சோளிங்கர், வேலூர்-ரத்னகிரி திருத்தணி-முருகன் கோவிலில் பக்தர்களால் வருமானம் 150 கோடிகளுக்கு மேல்.
3. மதுரை-மீனாட்சி, அழகர், கூடல் கோவில், வருமானம் 150 கோடிகளுக்கு மேல்.
4. திருச்சி, திருவானைக்கோவில், திருவரங்கம் கோவில் வருமானம் 150 கோடிகளுக்கு மேல்.
5. நாமக்கல் ஆஞ்சநேயர், கிரிவலப்புகழ் திருவண்ணாமலை கோவில் வருமானம் 100 கோடிகளுக்கு மேல்.
6. சென்னை வடபழனி, பார்த்தசாரதி, கபாலி, அஷ்டலட்சுமி, காளிகாம்பாள், மருந்தீஸ்வரர் கோவில்கள் வருமானம் 150 கோடிகளுக்கு மேல்.
7. தேனி வீரபாண்டி கோவில், மாங்காடு காமாட்சி அம்மன், திருவேற்காடு கருமாரியம்மன், சமயபுரம் மாரியம்மன், பண்ணாரி அம்மன், சிறுவாச்சூர் மதுரகாளியம்மன் கோவில்கள் வருமானம் 200 கோடிகளுக்கு மேல்.
8. கும்பகோண மகாமகக் கோவில்கள், தஞ்சைக் கோவில்கள் வருமானம் 100 கோடிகளுக்கு மேல்.
9. ராமேஸ்வரம், நெல்லையப்பர், சுசீந்திரம், கன்னியாகுமரி கோவில்கள் வருமானம் 150 கோடிகளுக்கு மேல்.
10. கோவை ஈச்சனாரி விநாயகர், மருதமலை, பேரூர், ஈரோடு, திருப்பூர், நீலகிரி, சத்தியமங்கலம் கோவில்கள் வருமானம் 150 கோடிகளுக்கு மேல்.
11. திருச்செந்தூர் முருகன், தென்காசி கோமதியம்மன், ராஜபாளையம், விருதுநகர், சிவகாசி, கோவில்பட்டி, குற்றாலீஸ்வரர் கோவில்கள் வருமானம் 150 கோடிகளுக்கு மேல்.
12. பிள்ளையார்பட்டி விநாயகர், குன்றக்குடி முருகன், காரைக்குடி, புதுக்கோட்டை கோவில்கள் வருமானம் 100 கோடிகளுக்கு மேல்.
13. சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, கோபி, விழுப்புரம், கோவில்கள் 100 கோடிகள்
14. திண்டுக்கல், காஞ்சி,கரூர், திருவாரூர், நாகப்பட்டினம்,கடலூர், கோவில்கள் வருமானம் 100கோடிகள்.

**ஆக மொத்தம் ரூபாய் 1800 கோடிகளுக்கு மேல்.**

இவ்வளவு வருமானம் வந்தும், இந்த கோயில்களில் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்காமல் கோவில் நிர்வாகமும் மற்றும் அரசும் இந்த பணத்தை எல்லாம் வேறு வேறு காரியங்களுக்கு உபயோகப்படுத்துகின்றன. உதாரணமாக, இந்து அறநிலையத்துறை உயர் அதிகாரிகளுக்கு சொகுசு கார்கள் வாங்கப்படுகின்றன.

வாரா வாரம் நடக்கும் அலுவலக மீட்டிங்களுக்கு கிலோ கணக்கில் ஸவீட், காரம் வாங்கி வயற்றில் கொட்டப்படுகின்றன. மற்றும் உண்டியல் வைத்துள்ள ஆயிரமாயிரம் இந்துக் கோவில்களும் அதன் சொத்துக்களும் இந்த அரசுத் அறநிலையத் துறையின் கீழ் வருபவையே. அது போக, மேலும் கீழ்கண்ட வருமானங்கள்:

- கோவில்களில் உள்ள உண்டியல்,
- நேர்த்திக்கடன்கள்,

- திருக்கல்யாணம்,
- தேர் இழுப்பு
- மொட்டையடித்தல்,
- அர்ச்சனை,
- அபிஷேகம்,
- பிரசாத விற்பனை,
- வரலாற்றுச் சிறப்புமிக்க கோவில்களுக்கு மன்னர்கள் எழுதி வைத்த பல ஆயிரம் ஏக்கர்கள் நிலங்கள்,
- கோவிலைச் சுற்றிய வீதிகளில் இருக்கும் கடைகள் மூலம் வரும் மிகமிகக் குறைந்த குத்தகை.
- இவ்வாறாக, குறைந்தபட்ச வருமானம் என்பது கோவில்கள் வாயிலாக 1800 கோடிகளுக்கு மேல். இவையெல்லாம் எங்கே போகிறது என்று யாருக்கும் தெரியவில்லை.
- கோவில்கள் வழியாக வரும் இது போக சைவ ஆதீனங்களது சொத்துக்கள் வழியாக வரும் வருமானம் வேறு
- பல ஆயிரம் கோடி சொத்துக்கள் பல்வேறு சைவ ஆதினங்களுக்குச் சொந்தமானவை.

மேல்மருவத்தூர் கோவில் நிறுவனம் இந்தத் துறையின் கீழ்வராததால் விளைந்த நன்மைகள்:

- பாலி டெக்னிக் கல்லூரி
- இஞ்சினியரிங் கல்லூரி
- மருத்துவப் படிப்புக்கல்லூரி+ மருத்துவமனை என மக்களுக்கு பக்தர்களின் காணிக்கை, சடங்குகள் வழி வருமானம் செலவிடப்பட்டிருக்கிறது..

காஞ்சி சங்கரமடம் மற்றும் மடத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் காஞ்சி காமாஷி கோவில் இதர கோவில்கள் வழி பக்தர்கள் அளிக்கும் காணிக்கை, சடங்குகள், பிரசாத விற்பனை வருமானம் சங்கரா பள்ளிகளாக, சங்கரா கல்லூரிகளாக தமிழகமெங்கும் மக்களுக்கு உதவும் வழியில் செலவிடப்பட்டு வருகின்றன.

திருப்பதி வெங்கடாஜலபதி கோவில் வருமானத்தில் ஒரு பல்கலைக்கழகம், 25 கல்லூரிகள், கல்விநிலையங்கள், நூற்றுக்கும் மேற்பட்ட பள்ளிகள் என இறைவனால் கிடைக்கும் வருமானம் கல்விக்கு முழுமையாகப் பயன்படுத்துகிறது.

ஆனால் நம்முடைய தமிழ்நாட்டில் இந்துமத கோவில்கள் மூலம் இத்தனை வருமானங்கள் வந்தும் நம்மால்,

- மருத்துவமனைகள், பள்ளிகள், கல்லூரிகள் என்று மக்களுக்குப் பயன்படுகிற மாதிரியான நல்லதைச் செய்வதில்லை.
- 1800 கோடிகளைச் செலவழித்து 50 கல்லூரிகள் கட்டலாம். படிப்புக்கு இட ஒதுக்கீடு அவசியப்படாமல் கேட்டால் படிப்பு கிடைக்கும் படி இட ஒதுக்கீட்டையே இல்லாமல் ஆக்கிவிடலாம்.
- மருத்துவமனைகள் பல கட்டி மக்களின் சுகாதார, ஆரோக்கியம் பேணலாம். இந்துக்கோவில்கள் மூலம் வரும் வருமானத்தை கடவுளே இல்லை, இல்லை, இல்லை கடவுளை நம்புபவன் காட்டுமிராண்டி என்கிற கொள்ளைக்கூட்டமும், தமிழக அரசும் அதிகாரத்தில் கடந்த 42 ஆண்டுகளாக இருந்தபடியே, கொள்ளையடிக்கின்றன. சதா சர்வ காலமும், இட ஒதுக்கீடு என்பதிலேயே மக்களை திசைதிருப்பி, "காணிக்கையை உண்டியலில் மட்டுமே போடவும்" என்று அறிவிப்புப் பலகைகள் வைத்து, மிக மலிவாக குத்தகையை கழகக் கண்மணிகளுக்கு விட்டு, என எல்லாவகையிலும் மொத்தமாக கோவில் வருமானங்களான நிதியைக் கொள்ளையடிப்பது அரசும் அதன் துறையும்.

தமிழ் நாட்டிலுள்ள கோவில் சொத்துக்களை, அரசியல் தலைவர்கள், வட்ட, மாவட்டங்கள் கட்டுப்பாட்டில் இருந்து மீட்க வேண்டும்.

இந்த அநியாயங்களை பொது மக்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும்.

**- நன்றி திரு.மயில்சாமி**

## நேர்மையாளர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்

அந்தப்பணம் போதும்!!

காமராஜர் 1954ம் ஆண்டு தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பதவி வகித்தார். அவர் தனது பதவியின் காரணமாக சென்னையில் இருக்க, அவரது வயதான அன்னை சிவகாமி அம்மையார் அவரது சொந்த ஊரான விருதுநகரில் உள்ள சொந்த வீட்டிலேயே தங்கியிருந்தார்.

அவரது அன்னையாரின் உணவு மற்றும் இதர செலவுகளுக்காக மாதம் ரூ.120/- மட்டுமே அனுப்பி வந்தார் காமராஜர். "இவ்வளவு தானா?" என்று முகத்தை சுளிக்காமல் அந்தப்பணத்தைக்கொண்டு வாழ்க்கை நட்த்தினார் சிவகாமி அம்மையார்.

ஆனால் , ஒரு சந்தர்ப்பத்தில் அவருக்கு அந்தப்பணம் போதவில்லை. மேலும் சிறிதளவு பணத்தை விரும்பிய அவர், தன் விருப்பத்தை காமராஜரின் நண்பர் தனுஷ்கோடி என்பவரின் மூலமாக சென்னையிலிருக்கும் காமராஜருக்குத் தெரியப்படுத்தினார்.

"மகனே காமாட்சி, நீ மந்திரியாக இருப்பதால் இங்கு என்னைப் பார்க்க யார் யாரெல்லாமோ வருகிறர்கள், என்னிடம் பேசுகிறார்கள், வேறு பலர் மற்ற மொழிகளில் ஏதேதோ பேசுகிறார்கள், அவர்கள் பேசுவதெல்லாம் எனக்குப்புரியவில்லை. இருந்தாலும், வீட்டுக்கு உபசரிப்பது நம் கடமை அல்லவா? நீ அனுப்புகின்ற 120 ரூபாய் பணத்தில் மிச்சம் பிடித்து அவர்களுக்கு ஒரு சோடா கலர் கூட வாங்கிக் கொடுக்க முடியவில்லை. ஆகவே, அடுத்த மாத்திலிருந்து 30 ரூபாய் சேர்த்து 150 ரூபாயாக அனுப்பு."

தனுஷ்கோடியின் மூலமாக இந்தச் செய்தியை அறிந்த காமராஜருக்குக் கோபம் வந்து விட்டது.

"இதோ பார் தனுஷ்கோடி வீட்டுக்கு எத்தனையோ பேர் வரத்தான் செய்வார்கள், வருகின்ற அனைவருக்குமே சோடா கலர் வாங்கிக் கொடுத்து உபசரிப்பது என்பது இயலாத காரியம், வருகிறவர்களும் சோடா கலர் கொடுத்து உபசரிப்பார்கள் என்ற எண்ணத்தோடு வருவதில்லை. தவிர, இந்த வயதான காலத்தில் அம்மா ஓய்வெடுக்காமல் பணத்தை சேர்த்து வைத்து , கோயில் குளம் என்று ஊர் ஊராக புறப்பட்டு விடுவார். இது அவர் ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல. எனவே, அவரது மாதச் செலவுக்கு 120 ரூபாயே போதும்" என்று கூறி மறுத்துவிட்டார்.

மக்களின் தலைவர் என்றால் இவரைப்போல் அல்லவா இருக்க வேண்டும்

## திருமண வரவேற்பில் மணமக்களுக்கு அன்பளிப்பு

ஒரு திருமண வரவேற்பில் மணமக்களுக்கு அன்பளிப்பும், அதனுடன் இணைந்த ஒரு கடிதம் வந்தது..

அதில் ஊரின் சிறந்த திரை அரங்கில், புதிய படத்துக்கான இரண்டு டிக்கெட்டுகள் இணைக்கப்பட்டிருந்தன..

மேலும், "இதை அனுப்பியவர் யார் என்று கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்" என்றொரு குறிப்பும் இருந்தது..

தம்பதிகள்இருவரும் எவ்வளவோ சிந்தித்துப் பார்த்தும் அவர்களால் யார்? என்று கண்டு பிடிக்க முடியவில்லை..

இருந்தாலும் இலவசமாக வந்த டிக்கெட்டை அவர்களால் எடுத்துக்கொண்டு இருவரும் அந்த திரைப்படத்தை குறிப்பிட்ட நாளில் பார்த்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினர்..

வீட்டை திறந்தவர்களுக்கு ஒரே அதிர்ச்சி..

வீட்டிலிருந்த விலை உயர்ந்த பொருட்கள் எல்லாம் கொள்ளையடிக்கப் பட்டிருந்தன..

வீட்டில் ஒரு கடிதமும் இருந்தது அதில், "என்னா? படம் சூப்பரா?" என்று எழுதியிருந்தது..

அவர்களது தேடலுக்கு பதில் கிடைத்தது..

"ஐயோ.. களவாணிப்பயலா அவன்?" என்று..

நீதி: "இலவசம்" யார் கொடுத்தாலும் அது கொள்ளை அடிப்பதற்கே..

உலகில் இலவசம் என்று எதுவும் இல்லை..

சிந்திப்போம்......

அதுவும் எதிர்வரும் மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில்

தீவிரமாக சிந்திப்போம்.... செயல்படுவோம்....

---

**இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:**

**திரு N சுப்ரமணியன், தலைவர் : 9444274352**
**திரு V கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் : 87783 12823**

**திருமதி பாக்யலட்சுமி, மேலாளர் : 90031 25142**

**E- Mail : acmchennai2001@yahoo.co.in**
**Website : anticorruptionchennai.com**

# இலவச அறிவிப்புகளால் கட்டமைக்கப்படும் சூது அரசியல்

"குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் தருகிறேன்"- ஸ்டாலின்.

"அப்படியானால் நான் 1,500 உடன் ஆறு காஸ் சிலிண்டர்கள் தருகிறேன்" - எடப்பாடி பழனிச்சாமி.

இப்படி இன்னும் என்னென்னவெல்லாம் தரப்போகிறீர்கள்.?

இலவச அறிவிப்புகள் அந்தந்த அரசியல் கட்சிகளின் தன் நம்பிக்கையின்மையை வெளிப்படுத்துகிறது

நாம் நிராகரிக்கப்பட்டுவிடலாகாது என்ற பயத்தைக் காட்டுகிறது.

மக்கள் நம்பிக்கையை பெறுவதற்கு வேறு எந்த தகுதியும் அவர்களிடம் இல்லாததைக் காட்டுகிறது

தமிழ் நாட்டின் கடன்சுமை ஏற்கனவே ஐந்தரை லட்சம் கோடிகளாய் உள்ள நிலையில், அதற்கான வட்டியே அரசின் மொத்த வருமானத்தில் கணிசமான பங்கை களவாடும் நேரத்தில், ஆளாளுக்கு இலவச அறிவிப்புகள் தருவது நாட்டின் நிதி நிலைமையை படுகுழியில் தள்ளுகிற அயோக்கியத்தனமான அறிவிப்புகளாகும். இந்த சுமையை இவர்கள் கொள்ளையடித்து சேகரித்து வைத்துள்ள தங்கள் சொந்த பணத்தில் இருந்து எடுத்து கொடுக்கப் போவதில்லை. மக்கள் தலையிலே தான் இது விழும்.

அதி மேதாவியாக தன்னைக் காட்டிக் கொண்டு, அற்பத்தனமான சூது அரசியலை நடத்த துணிந்தவர் கமலஹாசன் மூன்று பெண்களை கைபிடித்து மூவரையும் நட்டாற்றில் விட்ட நாயகனான இவர் முட்டாள்தனமாக அறிவித்ததே, "இல்லத்தரசிகளுக்கு மாதாமாதம் அரசு சம்பளம் தருவோம்" என்பதாகும் கமலஹாசன் சொல்லிய வார்த்தையை, இரு பெரிய திராவிடக் கட்சிகளும் தங்கள் தேர்தல் வாக்குறுதியாக தந்துள்ளன தன் மனைவி, மக்களை காப்பாற்ற வேண்டியது ஒவ்வொரு ஆண்மகனின் அடிப்படை கடமை. அப்படிக் காப்பாற்றுவதற்கான வேலை உத்திரவாதத்தை அளிப்பது தான் அரசின் கடமை. தமிழக வேலை வாய்ப்பு அலுவலங்களில் ஒரு கோடிக்கும் அதிகமானோர் வேலை கேட்டுப் பதிவு செய்துள்ளனர். அவர்களுக்கு வேலை தருவதற்கு என்னென்ன தொழிற்சாலைகளை ஏற்படுத்தலாம் அல்லது ஏற்படுத்த உந்து சக்தியாக இருக்கலாம் என்பதை விடுத்து, ஏன் ஓசி அறிவிப்புகள்?

ஏற்கனவே தரப்பட்ட இலவசங்கள் சமூகத்தில் பெரும் பின்னடைவையே ஏற்படுத்தி உள்ளன.

போக்குவரத்து தொழிலாளர்களின் சம்பளத்தில் பிடித்தம் செய்யப்பட்ட 7,000 கோடி ரூபாயை திருப்பித் தருவதற்கு துப்பற்ற நிலைமையில் அரசு கஜானா இருக்கும் போது, ஓட்டு பொறுக்கித் தனத்திற்காக என்ன வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் பொது பணத்தை எடுத்து அள்ளிவிடலாம் என்ற துணிச்சல் இவர்களுக்கு எங்கிருந்து வந்தது?

தமிழகத்தின் துப்புறவு தொழிலாளர்கள் லட்சக்கணக்கானோர் கௌரவமான சம்பளம் இல்லாமல் அத்துக் கூலிகளாக காண்டிடாக்டர்களிடம் கொத்தடிமைகளாக வேலை செய்கின்றனர். அவர்களே நமது சுகாதாரத்தின் தூதுவர்கள். அவர்களிடம் கடும் உழைப்பை பிழிந்தெடுத்துவிட்டு, அவர்களை வறுமை கோட்டிற்கு கீழ் அழுத்தி வைத்துள்ளது தொடர்பான குற்ற உணர்வே இல்லாமல் இருக்கிறதே இந்த சமூகம் அவர்கள் தன்மானத்துடன்

வாழ்வதற்கான வேலை உத்திரவாதத்தை தரத் திரானியற்றவர்கள் ஓசியாக பணம் தருவதாக வாக்குறுதி தருவதேன்?

"நான் தருகிறேன் நீ வாங்கிக் கொள்" என்பதே மன்னராட்சி மனோபாவமாகும் நீ யார் தருவதற்கு? இது மக்கள் பணம் இதை மேலும் வளர்த்து பெருக்குவதற்கு தான் அரசின் தலைமை பொறுப்பு உங்களுக்கு வழங்கப்படுகிறது. இருப்பதை காலி செய்வதற்கு அல்ல நீங்கள் வெளிநாடுகளிடம் கடன் பெற்று - இல்லையில்லை மக்களை அடமானம் வைத்து - நாட்டின் நிதி நிலைமையை மேலும் மோசமாக்குவதற்கு அல்ல, உங்களுக்கு தரப்போகும் ஆட்சி அதிகாரம்.

தரக்கூடிய ஒவ்வொரு கடனுக்கும் பின்னணியில் வெளிநாடுகள் வைக்கும் நிபந்தனைகள் என்ன? இந்த நாட்டின் முதல் தரமான உற்பத்தி பொருள்களை குறைந்த விலைக்கு வெளிநாடுகளிடம் தர வேண்டும் அல்லது அவர்களின் தேவையற்ற உற்பத்தி பொருட்களை நாம் இறக்குமதி செய்து நமது மக்கள் தலையில் கட்ட வேண்டும். இதற்கு நீங்கள் கமிசன் பெற்று கொழுக்க வேண்டும் இது தானே இது நாள் வரை நடந்து கொண்டுள்ளது. இவர்கள் ஊழலில் கொழுப்பதை மக்கள் பொருட்படுத்தாமல் இருக்கவே அரசியல்வாதிகள் இலவசங்களை அறிவிக்கிறார்கள். ஓட்டுக்கு பணம் தருவது குற்றமென்பது போல இதுவும் ஒரு குற்றம். அதுவும் ஆட்சி அதிகார பலத்துடன் செய்யும் குற்றமே.

இல்லதரசிகள் வீட்டில் இருந்தே உழைத்து ஆயிரமோ, ஐயாயிரமோ சம்பாதிக்கதக்க உற்பத்தி சார்ந்த திட்டங்களை அறிமுகப்படுத்தினால் அது வீட்டுக்கும், நாட்டுக்கும் ஒரு சேர நன்மை தருவதாகும். "என் நாட்டை ஓட்டாண்டியாக்கி, எனக்கு ஓசியில் தரப்படும் பணம் தேவையே இல்லை" என்று மக்களை விழிப்புணர்வு கொள்ளச் செய்யாவிட்டால், இந்த அரசியல்வாதிகள் தமிழகத்தை படுமோசமான நிலைக்கு தள்ளிவிடுவார்கள்.

எல்லோருக்குமே பணம் தேவையான ஒன்று தான், அது ஓசியில் கிடைப்பது அவமானம், உழைப்பால் பெறுவதே தன்மானம், சுயமரியாதை இயக்கத்தின் வழியே வந்த திராவிட இயக்கங்கள் தங்களின் வெற்றிக்காக மக்களின் சுயமரியாதையை காவு கொடுக்கக் கூடாது. இதை நீதிமன்றம் தடுக்க முடியுமா? தெரியவில்லை. நீதிமன்றங்கள் இவற்றை கடந்த காலங்களில் கண்டித்ததுடன் நின்றுவிட்டன.

மக்கள் மன்றம் "சீச்சி, வேண்டாம் பொதுப் பணம், அதை ஊதாரித்தனமாக கையாளதே" என்று சொல்லும் துணிச்சல் பெற வேண்டும். இந்த உண்மைகள் மக்களுக்கும் நன்கு தெரிந்துள்ளது. இலவசங்களை தருபவர்களை மக்கள் சந்தேகக் கண்ணோட்டத்துடன் பார்க்க தெளிந்துள்ளனர். "சும்மா தரவில்லை சுய ஆதாயத்திற்கு தான் தருகிறார்கள். எல்லாம் நம்ம தலையில் தான் விடியப் போகுது" என்று மக்களுக்கு தெரியாமல் இல்லை, தடுக்கத்தான் யாருமில்லை. தூக்கி தரப்படும் இலவசங்கள் நம் கையைக் கொண்டு நம் கண்ணை குத்திக் கொள்ளச் செய்யும் சூது அறிவிப்புகளே.

- நன்றி சாவித்திரி கண்ணன், அறம் இணைய இதழ் - March 9, 2021

## பொய்களால் பொழுதளக்கும் பிரதமர்- விவசாயிகள் கொந்தளிப்பு

விவசாயிகளுக்கு எதையெல்லாம் நிறைவேற்றித் தருவோம் என பாஜக அரசு கூறியதோ..., அவை நிறைவேற்றாமலே, நிறைவேற்றியதாகப் பொய்களை பேசி வருகிறது. உண்மையில் விவசாயிகளுக்கு ஓரளவுக்கேனும் இருந்த குறைந்தபட்ச பாதுகாப்பையும் புதிய வேளாண் சட்டங்கள் பறித்துக் கொண்டன, முக்கியமான விவசாய விளை பொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை என்ற எம்.எஸ்.சுவாமிநாதன் குழுவின் பரிந்துரையை நடைமுறைப்படுத்தி விட்டதாகவும், அது தொடரும் என்றும் பிரதமர் மோடியும் பா.ஜ.க.வும் கூறி வருவது கடைந்தெடுத்த பொய் என்பதே போராடும் விவசாயிகளின் கொந்தளிப்புக்கு காரணமாகும்.

மோடி அரசின் மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக விவசாயிகள் டெல்லியை முற்றுகையிட்டுப் போராடி வருகின்றனர். நடுங்கவைக்கும் குளிர், உறைபனி, மழை என எதற்கும் அசையாமல் 100 நாட்களுக்கும் மேலாக கொந்தளிக்கும் மனதுடன் போராட்டத்தை தொடர்கின்றனர்.

விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நடுவண் அரசு நடத்திய 11 சுற்றுப் பேச்சும் தோல்வி அடைந்துவிட்டது. நடுவண் வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர், "வேளாண் சட்டங்களின் ஒவ்வொரு பிரிவாக எடுத்து விவாதிக்கலாம் என்றால், யாரும் தயாராக இல்லை" என அங்கலாய்க்கிறார். "எம்.எஸ்.சுவாமிநாதன் குழு பரிந்துரையையும்விட கூடுதலாக விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு வழி ஏற்படுத்தியிருக்கிறோம்" என்றும் அவர் கூறுகிறார்.

"குறைந்த பட்ச ஆதரவு விலைக்கு (MSP) எந்தப் பாதிப்பும் இருக்காது" என பிரதமர் மோடியும் நடுவண் அரசும் மீண்டும் மீண்டும் உறுதி அளித்துக்கொண்டே உள்ளனர். அப்படியானால் விவசாயிகள் எதற்காகப் போராடுகிறார்கள்? அவர்களின் கோரிக்கைதான் என்ன?

2014 ஆம் ஆண்டில் மோடியை பிரதமர் வேட்பாளராக அறிவித்து பரப்புரையில் ஈடுபட்ட பா.ஜ.க., ஆட்சிக்கு வந்தவுடன் 12 மாதங்களில் எம்.எஸ்.சுவாமிநாதன் குழு பரிந்துரையை செயல்படுத்துவோம் என உறுதி அளித்தது. இதற்கும் மேலாக விவசாய விளை பொருட்களுக்கு உற்பத்தி செலவை கருத்தில் கொண்டு அதைக் காட்டிலும் ஒன்றரை மடங்கு விலை நிர்ணயிப்போம் என்றது.

நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக வெற்றி பெற்று, இந்தியாவின் ஆட்சி அதிகாரம் மோடியின் கைகளுக்குச் சென்றது. எம்.எஸ்.சுவாமிநாதன் குழு பரிந்துரை நடைமுறைக்கு வந்துவிடும் என உழவர்கள் எதிர்பார்த்தனர். பதவியேற்றதற்கு அடுத்த ஆண்டு 2015ல், உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்கு விசாரணைக்கு வருகிறது. அதில் பிரமானப் பத்திரம் தாக்கல் செய்த நடுவண் அரசு, "எம்.எஸ்.சுவாமிநாதன் குழு பரிந்துரையை செயல்படுத்தினால், சந்தை விலையை சிதைத்துவிடும்" என தெரிவித்திருந்தது.

அதன் பிறகும், நடுவண் அரசின் வழக்குரைஞர் தானே சொன்னார். மோடி அரசு கண்டிப்பாக செயல்படுத்திவிடும் என விவசாயிகள் நம்பினர். அன்றைய நடுவண் வேளாண் துறை அமைச்சர் ராதாமோகன் சிங், "சுவாமிநாதன் குழவின் மோசமான பரிந்துரையை மறந்துவிடுங்கள்" என ஒரே போடாக போட்டுவிட்டார். "தயவுசெய்து மத்தியப்பிரதேசத்தைப் பாருங்கள், சிவ்ராஜ் சிங் சவுகானின் மாதிரி எம்.எஸ்.சுவாமிநாதன் குழு பரிந்துரையைவிட முன்னேறியது. உயர்வானது" என்றும் அவர் கூறினார்.

ராதாமோகன் சிங் இப்படிக் கூறிய அதே ஆண்டில்தான் மத்தியப்பிரதேசத்தில் விவசாயிகள் போராட்டங்கள் வெடித்தன. மாண்டவுசர் என்ற இடத்தில் 5 விவசாயிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அடுத்து நடைபெற்ற சட்டப்பேரவைத்தேர்தலில் காங்கிரசிடம் ஆட்சியை பறிகொடுத்தது பா.ஜ.க., அத்தோடு சிவ்ராஜ் சிங் சவுகான் மாதிரி

என பா.ஜ.க. பேசுவதும் நின்றுபோனது.

அடுத்து 2018 ஆம் ஆண்டு, நாடாளுமன்றத்தில் 2018 - 2019 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை அருண் ஜேட்லி தாக்கல் செய்து உரையாற்றினார். அப்போது, "எம்.எஸ்.சுவாமிநாதன் குழு பரிந்துரையை ஏற்கனவே நடைமுறைப்படுத்திவிட்டோம். இதன்படி ராபி சாகுபடியில் செயல்பாட்டுக்கும் கொண்டுவந்துவிட்டோம்" என்றும் அறிவித்தார். (பாரா 13, 14)

2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரையில், "எம்.எஸ்.சுவாமிநாதன் குழு பரிந்துரையை நடைமுறைப்படுத்திய ஒரே கட்சி நாங்கள்தான்" என பா.ஜ.க. அறிவித்தது. "எம்.எஸ்.சுவாமிநாதன் குழு பரிந்துரையை எப்பொழுதும் ஆதரிப்பது பா.ஜ.க. மட்டும்தான். குறைந்த பட்ச ஆதரவு விலையை விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்ததும் பா.ஜ.க. தான்" என்றும் அறிவித்தனர். அதைத்தான் மீண்டும் மீண்டும் கூறிவருகின்றனர்.

எம்.எஸ்.சுவாமிநாதன் குழு பரிந்துரை என்ன சொல்கிறது?

உழவர்கள் உற்பத்தி செய்யும் அனைத்து உணவு தானியங்களுக்கும் அதன் உற்பத்தி செலவுடன், 50 விழுக்காட்டை லாபம் சேர்த்து அவர்களுக்கு தர வேண்டும் என்பதுதான் எம்.எஸ்.சுவாமிநாதன் குழுவின் முக்கியப் பரிந்துரை. ஆனால் உற்பத்திச் செலவில், களை எடுத்தல், நீர் பாய்ச்சுதல், குடும்பத்தினர் உழைத்தல் போன்றவை சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், சேர்க்கவில்லை அப்படி பார்க்கும் போது எம்.எஸ்.சுவாமிநாதன் குழு பரிந்துரையே விவசாயிகளுக்கு முழு நியாயத்தை பெற்றுத் தரவில்லை.

ஆனால், அதன் அடிப்படையில் கூட இது வரை குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை கொள்முதல் செய்யப்படவில்லை என்பது தான் சோகத்திலும் சோகம். புதிய வேளாண் சட்டங்களில் குறைந்த பட்ச ஆதரவு விலையை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டப்படியான நிர்பந்தங்களோ, அரசின் எழுத்து பூர்வமான உத்தரவாதமோ எதுவும் இல்லை.

ஆனால், "குறைந்த பட்ச ஆதரவு விலை தொடரும்" பிரதமர் மோடி மீண்டும் மீண்டும் கூறி வருகிறார். அதாவது இல்லாத ஒன்றை இருப்பதாகக் கூறி அது தொடரும் எனவும் பச்சையாக பொய்யுரைக்கிறார். நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரையிலும் இதே பொய்யை தெரிவித்துள்ளார். ஆனால், குறைந்த பட்ச ஆதரவு விலையை உத்தரவாதப்படுத்தும் வகையில் இருந்த முந்தைய சட்டத்தை தான் புதிய வேளாண் சட்டங்கள் போட்டு காலி செய்துவிட்டார் என்பதே விவசாயிகள் குற்றச்சாட்டு.

2014ல் நெல் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ 1,500 இருந்தது. தற்போது அது ரூ 1,888 என்பதாக உள்ளது. இந்த இடைபட்ட காலங்களில் உரம் உள்ளிட்ட இடுபொருட்கள் விலை தாறுமாறாக அதிகரித்துள்ளதை கவனத்தில் கொண்டால், மோடி அரசு கொடுத்த வாக்குறுதியை ஒரு சிறிதும் நிறைவேற்றவில்லை என்பது தான் யதார்த்தம். மேலும், இந்த வேளாண் சட்டங்கள் அறிவிப்புக்கு பின்பு சந்தையில் குவிண்டால் நெல்லை 1,500 க்கு விற்பதே கடினம் என்றாகிவிட்டது.

1965-லிருந்து மத்திய விவசாய அமைச்சகத்தின் கீழ் இயங்கும் விவசாய செலவு மற்றும் விலைக் குழுவின் பரிந்துரையின் பேரில் குறைந்தபட்ச ஆதாரவிலை நிர்ணயிக்கப்படுகிறது. 23 வகையான பொருட்களுக்கு மட்டும் மத்திய அரசின் கீழ் உள்ள வேளாண் செலவு மற்றும் விலைக்கான கமிசன் (Commission for Agricultural Costs and Prices (CACP), குறைந்த பட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. 7 தானிய வகைகள் (நெல், கோதுமை, மக்காச்சோளம், சோளம், ராகி, கம்பு, பார்லி), வகையான எண்ணெய் வித்துகள், 5 வகையான பயறு/பருப்பு வகைகள்

மற்றும் 5 வகையான வணிகப் பயிர்கள் ( பருத்தி, கரும்பு, தேங்காய் மற்றும் சணல்). இவைகளுக்கு மட்டுமே குறைந்த பட்ச ஆதரவு விலை இருந்தது பல்வேறு காரணங்களால், சமீப காலங்களில் உற்பத்திச் செலவில் பெரிய உயர்வு ஏற்பட்டபோதும், அதை மட்டும் கணக்கில்கொண்டு விலை நிர்ணயம் செய்வது பெரும்பாலும் நடைமுறையில் இல்லை. இன்னும் சொல்லப்போனால், விலைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட விலையைவிடக் குறைவான விலையை மத்திய அரசு பல்வேறு காலகட்டங்களில் அறிவித்து விவசாயிகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்ற போதிலும் அது ஓரளவு குறைந்தபட்ச பாதுகாப்பையாவது விவசாயிகளுக்கு வழங்கி வந்தது. தற்போதைய புதிய வேளாண் சட்டங்கள் அதற்கும் வேட்டு வைத்துவிட்டது என்பதே விவசாயிகளின் போராட்டங்களுக்கு முக்கிய காரணமாகும.

விவசாயத்துறை வளர்ச்சி குறித்து அரசால் தரப்படும் புள்ளி விவரங்கள் எதுவும் விவசாயிகளின் வாழ்க்கை நிலைமையை பிரதிபலிப்பதில்லை. உண்மையில், மிகப்பெரும் அதிருப்தியில் விவசாயிகள் சமூகம் இருக்கிறது. கடந்த 50 ஆண்டுகளில் மற்ற தொழில்துறையினரின் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்கள் எதுவும் விவசாயிகளிடம் எட்டிப்பார்க்கவில்லை.

1970 ஆம் ஆண்டில் ஒரு குவிண்டால் கோதுமையை ரூ.76 க்கு விற்பனை செய்தனர். 2015 ஆம் ஆண்டில் ஒரு குவிண்டால் கோதுமையை ரூ.1450க்கு விற்பனை செய்தனர். இந்த அதிகரிப்பு 20 மடங்குகூட இல்லை. ஆனால், உரத்தின் விலை 50 மடங்கு உயர்ந்துள்ளது. இதே காலத்தில், அரசு ஊழியர்களின் ஊதியம் 150 மடங்கு உயர்ந்துள்ளது. கல்லூரி ஆசிரியர்களின் ஊதியம் 170 மடங்கு அதிகரித்துள்ளது. பள்ளி ஆசிரியர்களின் ஊதியம் 320 மடங்கு உயர்ந்துள்ளது.

கடந்த 40-50 ஆண்டுகளில் விவசாயிகளின் வருமானம் மிகக் குறைந்துள்ளது. இன்று 80 விழுக்காடு உழவர்கள் நட்டத்தில் விவசாயம் செய்து வருகின்றனர். வேளாண்மை சார்ந்து வாழ முடியாது என்ற நிலையில், அவற்றில் இருந்து வெளியேறிவரும் பல லட்சம் பேர் வேலை தேடி நகரங்களைத் தேடி ஓடுகின்றனர். அங்கும் அமைப்புசாரா தொழிலாளர்களாக, புலம்பெயர் தொழிலாளர்களாக அவதிப்பட்டு, நாடு முழுவதும் குருதி சிந்த நடந்தே துயரத்தில் தவிக்கின்றனர்.

வேளாண் சமூகத்தின் இந்த பாதுகாப்பின்மையை நிரந்தரமாக உறுதிபடுத்திட மோடி அரசால் கொண்டு வரப்பட்டது தான் மூன்று வேளாண் சட்டங்கள். அதனை பொய்களால் நியாயப்படுத்திவிட முடியாது. இவற்றை முறியடிப்பதற்காக உழவர்கள் நடத்திக்கொண்டிருக்கும் போராட்டம், அவர்களின் வாழ்வா? சாவா? போராட்டம். இதில் மீண்டும், மீண்டும் பொய்களைக் கூறிவருவதன் மூலம் விவசாயிகளின் கோபத்தை தான் பிரதமர் அதிகப்படுத்துகிறார்.

- மணிமாறன், பத்திரிகையாளர் - February 9, 2021

---

**இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.**
**நன்கொடைகள் வருமான வரிச்சட்டம் பிரிவு 80 (G)யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு NEFT மூலமாக அனுப்பலாம் .**

**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**
**Savings A/C No: 000901000041657**

**மத்திய அரசின் அழைப்பு! தொழிற்சங்கங்கள் புறக்கணிப்பு!**

புதிய தொழிலாளர் சட்டங்களின் கீழ், விதிகளை உருவாக்குவதற்கான கூட்டத்தை தொழிற்சங்கங்கள் புறக்கணித்தன.

பெங்களூருவில், விஸ்ரான் தொழிற்சாலையில் சமீபத்தில் நடந்த கலவரத்தில் ஆலை அடித்து நொறுக்கப்பட்டது. வாகனங்கள் எரிக்கப்பட்டன. 148 பேர் கைது செய்யப்பட்டனர். அதற்கு காரணம் அங்கு தொழிலாளர்களின் பிரச்சினையைப் பேச சங்கம் இல்லாததுதான். நிரந்தரத் தொழிலாளர்களை விட ஆறு மடங்கு ஒப்பந்த தொழிலாளர் இருந்தால் அங்கு எப்படி தொழில் அமைதி நிலவும்? இந்தக் கலவரமான சூழலைத்தான் நாடு முழுவதும் உருவாக்கவிருக்கிறது மத்திய அரசு இயற்றியுள்ள புதிய தொழிலாளர் சட்டம்.

அரசு ஏற்கனவே இருந்த 44 தொழிலாளர் சட்டங்களுக்குப் பதிலாக நான்கு புதிய சட்டங்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளது. இந்த சட்டங்கள் முதலாளிகளுக்கு ஆதரவாகவும், தொழிலாளர்கள் உரிமைகளை பறிப்பதாகவும் உள்ளன என்று தொழிலாளர்கள் கூறுகிறார்கள். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நவம்பர் மாதம் 26ம் நாள் நாடு தழுவிய வேலைநிறுத்தம் நடந்தது. இதில் 25 கோடி தொழிலாளர்கள் கலந்து கொண்டதாக தொழிற்சங்கங்கள் கூறுகின்றன.

புதிய தொழிலாளர் சட்டங்களை அமலாக்க வேண்டுமானால், அதற்கான விதிகளை மத்திய அரசு உருவாக்க வேண்டும். தொழிலாளர் நலத்துறை இதற்கான ஆலோசனைக் கூட்டத்தை, கடந்த டிசம்பர் மாதம் 24 ம் தேதி காணொலி மூலம் நடத்தியது. மத்திய தொழிற்சங்கங்கள் அனைத்துமே இந்த ஆலோசனைக் கூட்டத்தைப் புறக்கணித்தன.

ஐஎன்டியுசி, ஏஐடியுசி, சிஐடியு, எச்எம்எஸ், தொமுச உள்ளிட்ட பத்து முக்கிய மத்திய தொழிற்சங்கங்கள் மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சந்தோஷ் குமார் கங்குவாருக்கு கடிதம் அனுப்பியுள்ளன. "தொழிற்சங்கங்களோடு விவாதிக்காமல், பாராளுமன்றத்தில் விவாதிக்காமல், தொழிலாளர் நிலைக் குழுவில் பேசாமல், மாநில அரசுகளோடு விவாதிக்காமல் நிறைவேற்றப்பட்டுள்ள இந்தச் சட்டங்களை நிறுத்தி வைக்க வேண்டும் என்று நாங்கள் கோரி வருவது உங்களுக்கு தெரியும். நான்கு சட்டங்களுக்கும் கூட்டங்களை தனித்தனியாக நடத்த வேண்டும். காணொலி மூலமாக அல்லாமல் நேரடியாகக் கூட்டத்தை நடத்த வேண்டும் " என்று கூட்டாக கடிதம் எழுதியுள்ளன. டிசம்பர்-24 அன்று நடந்த கூட்டத்தில் ஆளுங்கட்சியைச் சார்ந்த பிஎம்எஸ் தொழிற்சங்கம் மட்டுமே கலந்து கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் செயல்படும் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தை ஒரு மத்திய தொழிற்சங்கமாக மாற்றியதில் முக்கியப் பங்கு வகித்தவர் மு. சண்முகம், திமுக பாராளுமன்ற உறுப்பினர். "தொழிலாளர்களுக்கான பாராளுமன்ற நிலைக்குழுவில் நான் உறுப்பினராக இருக்கிறேன். நாங்கள் தொழிற்சங்கங்களோடு விவாதித்து பல நல்ல பரிந்துரைகளை தொழிலாளர் சட்டம் தொடர்பாக அரசுக்கு ஏற்கனவே அளித்துள்ளோம். அந்தப் பரிந்துரைகளில் ஒன்றைக் கூட அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. புதிய தொழிலாளர் சட்டங்களை அப்படியே படிப்பது என்பது வேறு. ஏற்கனவே இருந்த சட்டங்களைப் படித்து, அவைகளோடு ஒப்பிட்டு, அனுபவத்தோடு பார்ப்பது என்பது வேறு. அப்படிப் பார்க்கையில் இந்தப் புதிய சட்டம் மிக மோசமாக உள்ளது. உதாரணமாக ஒப்பந்தத் தொழிலாளர் சட்டத்தில் 10வது பிரிவில் உள்ள நான்கு அம்சங்களும் புதிய சட்டத்தில் இல்லை. அதாவது நிரந்தரத் தன்மையுள்ள வேலைகளில் ஒப்பந்த முறை கூடாது என்று அந்தப் பிரிவு கூறுகிறது. அந்த வேலைகளில் ஒப்பந்தத் தொழிலாளர்களை அமர்த்த உரிமம் (labour license) தரக்கூடாது என்று ஒப்பந்த தொழிலாளர் சட்டத்தில் உள்ளது. இது புதிய சட்டத்திலும் இல்லை. அரசு வெளியிட்டுள்ள வரைவு விதிகளிலும் இல்லை. இப்படி எத்தனை மாற்றங்கள் நடந்துள்ளன என்பது தெரியவில்லை. ஏற்கனவே இருந்த 44 சட்டங்களில் 29 சட்டங்கள்தான் புதிய சட்டத் தொகுப்பில் உள்ளன. மீதமுள்ள 15 சட்டங்களை அரசு நீக்கிவிட்டது. இது குறித்து சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் எழுப்பலாம் என இருக்கிறேன்.

அரசு செவிசாய்க்கவில்லை என்றால் விவசாயிகளைப் போல தொழிலாளர்களும் போராட வேண்டியதுதான்" என்றார் தொமுசவின் பொதுச் செயலாளர் மு. சண்முகம்.

அனைத்து தொழிலாளர்களுக்கும் ஒரே சங்கம் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வரும் ஏஐடியுசி சங்கத்தைச் சேர்ந்த அமர்ஜித் கௌர் அவர்களிடம் இது குறித்து கேட்டபோது இந்திய தொழிலாளர் மாநாடு (Indian Labour Conference) என்பது ஒரு முத்தரப்பு அமைப்பு. இதில் வேலை அளிப்போர், தொழிலாளர்கள், அரசுப் பிரதிநிதிகள் இருப்பர். கடந்த காலங்களில், இதில் விவாதித்தப் பின்புதான் தொழிலாளர் சட்டங்கள் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்த மாநாட்டை கடந்த ஐந்து ஆண்டுகளாக மோடி அரசாங்கம் கூட்டவில்லை. கடைசியாக 2015 ல்தான் இந்தக் கூட்டம் நடந்தது. பாராளுமன்ற நெறிமுறைகளுக்கு விரோதமாக தொழிலாளர் சட்டங்களை அரசு நிறைவேற்றி உள்ளது. தொழிலாளர்களிடம் விவாதித்த பின்புதான் சட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்பது உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நெறிமுறை.

முத்தரப்பு குழுக்களை அரசு கூட்டுவதில்லை என்று தொழிற்சங்கங்கள் சர்வதேச தொழிலாளர் அமைப்பிடம் (ILO) முறையிட்டன. எனவேதான் விவாதம் நடத்தினோம் என்று காட்டுவதற்காக அரசு டிசம்பர் 24 அன்று அரசு கூட்டிய கூட்டத்தினை நாங்கள் புறக்கணித்தோம். அதில் சம்பளம், தொழில் உறவு தொடர்பான இரண்டு சட்டங்கள் குறித்து பேசப்பட்டுள்ளன. சமூகப் பாதுகாப்பு, பணிப்பாதுகாப்பு குறித்த சட்ட விதிகளை உருவாக்குவதற்கான ஆலோசனைக் கூட்டம் ஜனவரி 12ம் நாள் நடைபெற உள்ளதாக அரசு அறிவித்துள்ளது. அதையும் பத்து தொழிற்சங்கங்களும் புறக்கணிக்கும்" என்றார் அமர்ஜித் கௌர்.

எளிதாக தொழில் செய்யத் தேவையான சூழலை உருவாக்குவது என்ற பெயரில் அரசு தொழிலாளர் நலன்களைக் காவு கொடுக்கிறது.கால ஓட்டத்திற்கு தகுந்தாற்போல சட்டங்களை திருத்துவது அவசியம்தான். ஆனால், அதில் சம்மந்தப்பட்ட தொழிலாளர்களை புறக்கணித்து விட்டு, பல அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய பாராளுமன்ற நிலைக்குழு கொடுத்த ஆலோசனைகளை புறந்தள்ளிவிட்டு, இந்தப் புதிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆங்கிலேயர் காலத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களில் இருந்த தொழிலாளர்களுக்கு ஆதரவான அம்சங்கள் கூட நீக்கப்பட்டுள்ளன. புதிய பொருளாதார கொள்கைகள் அமலான 1990க்குப் பிறகு தொழிலாளர் நலனுக்காக எந்த புதிய சட்டங்களும் கொண்டுவரப்படவில்லை. அரசு புதிய தொழிலாளர் சட்டங்களை நாற்பதே விநாடிகளில் நிறைவேற்றியுள்ளது. எந்த விதமான விவாதங்களும் பாராளுமன்றத்தில் நடைபெறவில்லை. ஊடகங்களும் இது குறித்து போதுமான அளவில் எழுதவில்லை.

பெரும்பான்மை என்கிற பெயரில் உரிமைகளை நசுக்க முடியாது. அப்படிச் செய்தால் சமூக கொந்தளிப்புதான் ஏற்படும். அதனால்தான் இப்போது புது தில்லியில் விவசாயிகள் போராடிக் கொண்டு இருக்கிறார்கள்.

சட்டத்தில் பல வரையறைகள் மாற்றப்பட்டுள்ளன. அரசு நினைத்தால் சில ஆலைகளில், சில இடங்களில் தொழிற்சங்கம் வைக்க முடியாது என்று சொல்லிவிட முடியும். சம்பளம் என்றால் என்ன என்பதற்கான வரையறை மாற்றப்பட்டுள்ளது. இதனால் தொழிலாளர்கள் பெறும் போனஸ், பணிக்கொடை(கிராஜீடி), மிகை நேர ஊதியம் (ஓவர்டைம்) என்பது குறையும். சங்க நிர்வாகத்தின் உள் விவகாரங்களில் அரசு தலையிடுகிறது. சட்டம் அமலாகும்போது தொழிலாளர்கள் நேரடியாக பாதிப்படைவார்கள். அப்போது கொந்தளிப்பு ஏற்படும். இதையெல்லாம் அரசு கணக்கில் எடுத்துக் கொண்டதா என்று தெரியவில்லை.

புதிய சட்டங்களை அரசு அமலாக்கினால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது "இந்தியாவின் பொருளாதாரம் 98 சதவீதம் முறையான பொருளாதாரம் (Formal Economy) இது தொழிலாளர்களை நம்பித்தான் உள்ளது. அரசு எங்களை உதாசீனப்படுத்தினால் நாங்களும் போராடுவோம்" என்றார் அமர்ஜித் கௌர்.

- பீட்டர் துரைராஜ் January 9, 2021

## அகிம்சை போராட்டத்தை அசிங்கபடுத்தும் நரித்தனம்...

முன்னெப்போதும் இல்லாத வகையில், தற்போது காந்தி நினைக்கப்பட வேண்டியவராகிறார்.

விவசாயிகளை - மக்களை - அடிமைப்படுத்தும் மூன்று சட்டங்களை திரும்பப் பெறக் கேட்டு நடக்கும் இந்தப் போராட்டம் காந்தியைக் கொண்டாடும் ஒன்றாகும். தில்லியின் எல்லையில் நடக்கும் போராட்டம் உலகம் கண்டிராத ஒன்றாக உள்ளது. இது எந்த ஒற்றைத் தலைமையின் கீழும் நடக்கவில்லை போராட்டத்தில் சிறிதும் வன்முறை இல்லை.

ஜன 26ல் நடந்த வன்முறை - போராட்டத்தின் உறுதி கண்டு பயந்த அரசு செய்வதறியாது - போராட்டத்தை வன்முறையாளர்களின் போராட்டம் என்று மக்களிடம் சித்தரிக்க ஆட்சியாளர்களே நடத்தியதாகும். இது அரசாங்கத்தை எதிர்த்து நடக்கும் போராட்டம் என்றே நம் முன் சித்தரிக்கப்படுகிறது. எந்த ஒரு இடத்திலாவது அப்படியான ஒரு வார்த்தை வெளிப்படவேயில்லை. அரசாங்கம் கொண்டு வந்த மூன்று சட்டங்களை அரசே திரும்பப் பெற வேண்டும். கோரிக்கை இவ்வளவு தான். கூடுதலாக வைக்கப்பட்ட கோரிக்கை, தங்களின் வாழ்வு மரியாதைக்குரிய ஒன்றாக இருக்க குறைந்த பட்ச ஆதரவு விலையை சட்ட பூர்வமானதாக்க வேண்டும் என்பதாகும்.

இந்த இரண்டே இரண்டு கோரிக்கைகள் தான் அரசின் முன்னே வைக்கப்பட்டிருக்கிறது. அரசிடம் வைக்கப்பட்ட வேண்டுகோள்களை அரசு நிறைவேற்ற வேண்டும் என்பது தான் போராட்டமே ஒழிய அரசை வெல்ல வேண்டும் என்ற போராட்டமல்ல, இது.

ஆனால், விவசாயிகளின் போராட்டத்தை அரசாங்கத்திற்கு எதிரானதாக நடத்திக் கொண்டிருப்பதாக அரசால் சித்தரிக்கப்படுகிறது. இந்தப் போராட்டம் ஆரம்பம் முதலே அரசை எதிர்த்தல்ல. அரசு கொண்டு வந்துள்ள மூன்று சட்டங்களை ஏற்க முடியாது என்று தான் போராட்டம்.

யார், யாரை வெற்றிக் கொள்வது, தோற்கடிக்கச் செய்வது?

அரசை மக்களா?

மக்களை அரசா?

மக்களும் அரசும் வேறு வேறா என்ன?

நாம் தானே அரசு'

நான் தானே அரசின் பகுதி.

இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் அல்லவா.

இந்த இரு பக்கங்களும் ஒன்றையொன்று எப்போதும் பார்ப்பதில்லை.

ஆனால் நாணயத்தின் பக்கவாட்டுப் பகுதி இரண்டோடும் உறவாடிக் கொண்டே இருக்கிறது.

ஜனநாயகத்தில் இந்த உறவாடல் தான் முக்கியமான ஒன்று. காந்தியம் இந்த உறவாடலை, உரையாடலை தொடர்ந்து இயக்கும் வகையாகவே எதிர் தரப்பின் மனசாட்சியைத் தொடும் வழியைக் கையாண்டது. காந்தியின் தென்னாப்பிரிக்கப் போராட்டங்களின் முறைகள் நமக்கு அதிகம் தெரிந்திருக்கவில்லை. இந்திய காந்தி புடம் போடப்பட்டது அங்கு தான். தமது சத்தியாகிரக வழிகளை செம்மைப்படுத்திக் கொண்டதும் அங்கு தான்.

தென்னாப்பிரிக்கவில் காந்தி தீவிரமாகப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்த போது இந்தியர்களையும் கருப்பினத்தவர்களையும் அடிமைகள் போல வைத்திருக்க வேண்டும் என்பதில் ஒத்த கருத்து கொண்டிருந்த தென்னாப்பிரிக்க வெள்ளையர்களுக்கும், போயர்களுக்கும் இடையே போர் வெடித்தது. எங்களை அடிமையாக வைத்திருக்க ஆசைப்படும் இரு தரப்பும் மோதிக் கொள்கிறார்கள். ஆகா மோதிக் கொள்ளட்டும் என்று காந்தி மகிழ்ந்திருக்கவில்லை. தனது போராட்டத்தை நிறுத்தி விட்டு தொண்டர்களை செவிலியர் அமைப்பாக மாற்றி போரில் அடிபட்ட இரு தரப்பு வீரர்களையும் மருத்துவ உதவிக்கு தூக்கிச் செல்லும் அணியாக மாற்றினார்.

எப்போதுமே அரசாங்கத்திற்கு தனது போராட்டத்தை மட்டுமல்ல, போராட்ட முறையையும், வழிகளையுமே கூட வெளிப்படையாக தெரிவித்தே நடத்தினார், காந்தி. அதற்கு முக்கிய காரணம் அரசும், நானும் வேறல்ல என்பது.

காந்தியைக் கொண்டாடும் நாம் காந்தியை சிறு சிறு துண்டுகளாகவே பார்க்கிறோம். இரண்டு மூன்றாயிரம் ஆண்டுகளாக அரசரையே தனது சமூக நிர்வாகத்தின் தலைவராகக் கொண்டாடிய சமூகத்திற்கு முதன் முறையாக அரசியல் என்ற ஒன்றை அறிமுகப்படுத்தியதே காந்தி தான். இந்திய சமூகத்தை அரசியல் மயப்படுத்தியவர் காந்தி. அரசியல் மயப்பட்ட இந்திய சமூகமும்,இந்திய ஆட்சியாளர்களும் ஜனநாயகமயப்படவேயில்லை. இந்திய சமூகத்திற்கு ஜனநாயகம் மிகப் புதிய ஒன்று.

குடும்பம் தொடங்கி அரசு வரை நாம் ஜனநாயகமயப்படவே இல்லை. தன்னிடம் வேண்டுகோள் வைத்து போராடும் மக்களை,எளிய விவசாயிகளை அரசு எதிரியாக சித்தரிக்கப் பார்க்கிறது

காந்தியின் பார்வையில், "நம்மை நாமே ஆளத் தெரிந்து கொள்வதே சுயராஜ்யம்". சுயராஜ்யம் என்பது ஒரு கனவைப் போன்றது என்று நினைக்க வேண்டாம். சும்மா உட்கார்ந்து இருப்பதால் அது வரும் என்பதல்ல. அதை அடைந்து விட்ட பிறகு

மற்றவர்களும் அப்படியே செய்யும்படி நம் ஆயுள் இறுதிவரை பாடுபட வேண்டும் என்கிறார் காந்தி தனது இந்திய சுயராஜ்யம் நூலில்.

இந்திய சுயராஜ்யம் என்ற இந்தச் சிறு நூல் தான் காந்தி எத்தகைய மனிதர், எத்தகைய பார்வை வைத்திருந்தார் என்பதைக் காட்டும் நூல்.

அரசு என்பதே நம்மால் நிர்வகிப்பட வேண்டிய ஒன்று. அதற்கு நம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ளாமல், தகுதி படுத்திக் கொண்டவர்களை அடையாளம் கண்டு - அவர்களை அந்த நிர்வாகத்திற்கு அனுப்பாமல் - தவறு செய்து கொண்டிருக்கிறோம்.

இப்போது தில்லியில் நடக்கும் போராட்டத்தை உலகு கவனித்துக் கொண்டிருப்பதற்குக் காரணம் போராட்டத்தின் முறை.குழந்தைகளும்,பெண்களும் கூட இந்த அகிம்சை களத்தில் உள்ளனர். காந்தியின் அணுகுமுறை அரசாங்கத்தை நடத்துபவர்களின் மனதில் புரிதலை, மாற்றத்தை ஏற்படுத்துவது. மனசாட்சி என்ற ஒன்று இல்லாத மனிதன் கிடையாது. அவனது மனசாட்சியைத் தட்டி எழுப்புவதும், உலுக்குவதும் தான் அவரது அணுகு முறை.

எதிராளிக்கு சிரமத்தைத் தராத, வலியைத் தராத போராட்டம் காந்தியுடையது. தன்னிலும் அதிக பலம் பொருந்திய எதிராளியான இந்திய அரசை - ஆள்பவர்களை - எதிர் கொள்ள எடுத்துக் கொண்டுள்ள ஆயுதம் மிக அற்பமான ஒன்று. நாங்கள் உங்களது நிர்வாகத்தை எந்த விதத்திலும் தொந்திரவு செய்ய மாட்டோம். மக்களின் அன்றாட வாழ்வு பாதிக்கும் எதையும் செய்ய மாட்டோம். நாங்கள் இங்கேயே இப்படியே காத்திருக்கிறோம். நீங்கள் உங்களது முடிவை மாற்றி அமைக்கும் வரை காத்திருப்போம். இதைத் தவிர வேறு எதையும் அவர்கள் செய்யவே இல்லை.

எவ்வளவு குளிர், எவ்வளவு பனி இருந்தாலும் அதைத் தாங்கிக் கொண்டு காத்திருக்கிறோம் என்று காத்திருக்கிறார்கள். எதிராளியின் மனசாட்சியை உலுக்கவே இத்தனை கொடும் சிரமங்களை ஏற்கிறார்கள். தன்னை வறுத்திக் கொள்கிறார்கள். இள வயதினர்கள் தன்னை வலிந்து வருத்திக் கொள்ளும் இத்தகைய போராட்டத்தை தங்களின் வாழ்நாளில் முதன்முதலாகவே சந்திக்கின்றனர். காந்தியின் போராட்ட முறையை முதன்முறையாக காண்கின்றனர்.

அங்கே இருக்கும் ஒவ்வொரு விவசாயியும், அவர்களுக்கு உதவும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காந்தியாகவே அங்கே இருக்கின்றனர். நம் எல்லோருக்குள்ளும் ஒரு காந்தி இருந்து கொண்டே இருக்கிறார். காந்தி என்பவர் ஒரு மனிதாராக அல்ல. மனித தன்மைகளின் அடையாளமாக, மனித அறத்தின் அடையாளமாக இந்தக் காந்தி இருக்கிறார். தில்லியின் எல்லையில் இருக்கும் விவசாயிகளின் போராட்டம் முற்றாக காந்தியை உள்வாங்கிய போராட்டம்.

இங்கே தில்லி போராட்டத்தை வெகு தொலைவில் இருந்து வியப்போடு பார்க்கும் ஒவ்வொருவரும் தன்னையும் அந்தக் காந்தியர்களாக நினைத்துக் கொள்வது மிக அவசியம். இங்கிலாந்து அரசு இந்திய அரசாட்சியை விட்டு விட்டுச் சென்றதற்கு முக்கிய காரணம் இந்தியாவில் பல்லாயிரம் காந்திகள் உருவானதேயாகும். துரதிருஷ்டவசமாக சுதந்திரம் வாங்கியதும் ஒவ்வொருவரும் நமக்குள் இருந்த காந்தியை மனதின் அடி ஆழத்தில் பத்திரமாக புதைத்து வைத்து விட்டோம்.

நமக்குள் அடி ஆழத்தில் இருக்கும் காந்தியை வெளியே கொண்டு வரல் தான் தேவை. நமக்குள் இருக்கும் காந்தியை தேடிப் பிடித்து நம் ஒவ்வொருவரையும் காந்தியாக உருமாற்றிக் கொள்ள முடியும் என்று உலகிற்குக் காட்டுகிறது தில்லி முற்றுகை. காந்தி என்ற மனிதன் தான் மறைந்தார். ஆனால் காந்தி என்ற மனிதர் நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறார். சமூகம் நன்றாக இருக்க வேண்டும். சக மனிதன் துன்புறக்கூடாது என்று உணர்வு தான் காந்தியைப் புரிந்து கொள்வதற்கான தொடக்கம். நான் இந்தப் புரிதலின் மூலமே அறிந்து கொள்கிறேன் காந்தியை.

தன்னை வறுத்திக் கொள்வதை விட மிகப் பெரிய வீரம் ஏதுமில்லை. தங்களை வருத்திக் கொண்ட இந்த வீரமும் இந்திய அரசை நிர்வகிப்பவர்களை எதிர்க் கொண்டிருக்கும் விதத்தையும் தான் உலக மக்கள் வியப்போடு கவனிக்கிறார்கள். ஆனால்,அப்படிப்பட்ட அகிம்சை போராட்டத்தை நரித் தந்திரத்துடன் அசிங்கப்படுத்த காய் நகர்த்துகிறது பாஜக அரசு.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவரும் தனக்குள் இருக்கும் காந்தியை அடையாளம் கண்டு கொண்டது தான் இந்தப் போராட்டத்தின் மகத்தான மக்கள் ஆதரவுக்கு காரணம். அதை சீர்குலைக்கும் வண்ணம் போலீசாரின் குடும்பத்தினரை தூண்டிவிட்டு அரசு போராட வைப்பதும், போராட்டத்திற்கு பல வகையிலும் தொடர்ந்து உதவி வந்த மக்களை போராட்டக்கார்களுக்கு எதிராக திருப்பிவிட்டிருப்பதும் சிறுமையிலும்,சிறுமை இது அகிம்சை மொழி தெரியாத அரசாங்கம் மட்டுமல்ல, போராடும் மக்களும் தம் குடிகளே என்பதை உணர மறுக்கும் அரசாகவும் உள்ளது என்பது தான் கவலையளிக்கிறது.

''அன்று காந்தியைக் கொன்றார்கள்''

இன்று காந்தியத்தை கொல்லத் துடிக்கிறார்கள்'முடியுமா..?

கட்டுரையாளர் : அறச்சலூர் செல்வம்,
தமிழக இயற்கை விவசாய முன்னோடி,
நம்வாழ்வாரின் அணுக்க நண்பர்,
பொது நலன் சார்ந்த களப் பணியாளர் ,
காந்தியப் பற்றாளர்

# ***Likes and behaviour***

**"AWESOME QUESTION. AWESOME ANSWER"...**

Question - How many people are worried about BSNL?
Answer - Everyone.
Question - How many people use BSNL's SIM?
Answer - None.

Question - How many people worry about government school?
Answer - All.
Question - How many people have children in government school?
Answer - None.

Question - How many people want a polythene free environment?
Answer - All.
Question - Who does not use polythene?
Answer - None.

Question - Who wants a corruption-free India?
Answer - All.
Question - How many people did not take bribe for their selfishness?
Answer - Everybody has taken a bribe in some form or the other.

Question - How many people worry about falling rupee?
Answer - All do.
Question - How many people buy only indigenous goods?
Answer - None.
Question -Who is unhappy with the deteriorating traffic conditions?
Answer - All.
Question - Who follows 100% traffic rules?
Answer - None.

Question - Who wants change?
Answer - All.
Question - How many people want to change themselves?
Answer - None.

# ரூ.5 லட்சம் லஞ்சம் வாங்கிய வணிக வரி அதிகாரி கைது




■ பறிமுதல் செய்யப்பட்ட லஞ்சப் பணம். ■ கைதான செல்வகுமார்.

**சென்னை, மார்ச் 6–**

மளிகை மொத்த வியாபாரியிடம், ஜி.எஸ்.டி., வரி கணக்கு தாக்கல் தொடர்பாக, 5 லட்சம் ரூபாய் லஞ்சம் வாங்கிய, வணிக வரித்துறை அதிகாரி கைது செய்யப்பட்டார்.

சென்னை, ஆயிரம் விளக்கு கிரீம்ஸ் சாலையில், வணிக வரித்துறை அலுவலகம் செயல்படுகிறது. இங்கு, நுண்ணறிவு இரண்டாம் பிரிவில், வரி வசூலிக்கும் அதிகாரியாக செல்வகுமார், 43, பணி புரிந்தார்.

இவர், திருவள்ளூரில், மளிகை பொருட்கள் மொத்த வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த சிதம்பரம் என்பவரிடம், ஜி.எஸ்.டி., வரி கணக்கு தாக்கல் தொடர்பாக, 75 லட்சம் ரூபாய் லஞ்சம் கேட்டு உள்ளார்.

இவரிடம், சிதம்பரம், 'தொழிலில் பெரிய அளவில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. இதனால், மளிகை பொருட்கள் மொத்த வியாபார கடையை மூடிவிட்டேன். தற்போது, எந்த தொழிலிலும் ஈடுபடவில்லை.

இதனால், 75 லட்சம் ரூபாய் தர முடியாது' என, கூறியுள்ளார். எனினும், செல்வகுமார் விடுவதாக இல்லை.

பல கட்ட பேரத்திற்கு பின், ஆடிட்டர் கோபால கிருஷ்ணன் என்பவர் வாயிலாக, '20 லட்சம் ரூபாய் தர வேண்டும். இல்லையென்றால் சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பேன்' என, செல்வகுமார் மிரட்டியுள்ளார்.

இது குறித்து, சிதம்பரம், சென்னை ஆலந்துாரில் உள்ள, லஞ்ச ஒழிப்பு துறை இயக்குனர் அலுவலகத்தில் புகார் அளித்தார்.

விசாரணையில், கோபாலகிருஷ்ணன், ஆடிட்டர் தொழிலுடன் புரோக்கராக செயல்பட்டு, செல்வகுமாருக்கு லஞ்சப்பணம் வசூலித்து தரும் வேலையில் ஈடுபட்டு வந்தது தெரிந்தது.

போலீசார் அறிவுரைப்படி, செல்வகுமாரை தொடர்பு கொண்ட சிதம்பரம், முன் பணமாக, 5 லட்சம் ரூபாய் தருவதாக ஒப்புக்கொண்டார்.

சென்னை வடபழனி, 100 அடி சாலையில், பிரபல தனியார் மருத்துவமனை அருகே, சிதம்பரத்திடம் இருந்து, செல்வகுமார் நேற்று, 5 லட்சம் ரூபாயை வாங்கிய போது, லஞ்ச ஒழிப்பு போலீசாரால் கைது செய்யப்பட்டார்.

# லஞ்சம் தவிர்!
# நெஞ்சம் நிமிர்!

தினத்தந்தி

பதவி உயர்வு பெற்ற 1 மாதத்தில்

## ரூ.15 ஆயிரம் லஞ்சம் வாங்கிய சப்-இன்ஸ்பெக்டர் கைது

### லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி நடவடிக்கை

திருவிக நகர், பிப்.28- அம்பத்தூர் போலீஸ் நிலையத்தில் சப்-இன்ஸ்பெக்டராக பணிபுரிந்து வந்தவர், ரூ.15 ஆயிரம் லஞ்சம் வாங்கியதாக கைது செய்யப்பட்டார்.



சப்-இன்ஸ்பெக்டர் தமிம்

**லஞ்ச ஒழிப்பு போலீசார்**

**சப்-இன்ஸ்பெக்டர் கைது**

தின ஓசை

DINA OSAI

TAMIL DAILY

காலை நாளிதழ்

RNI No. TNTAM/2013/52079

மலர் : 10 இதழ் : 186 21.02.2021 ஞாயிறு சென்னை பக்கம்-4 விலை-ரூபாய் 5/-

## புவனகிரி வெள்ளாற்றில் தடுப்பணை கட்டிட கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்



கடலூர் மாவட்டம் புவனகிரியில் வெள்ளாற்றில் தடுப்பணை கட்டும் பணியை உடனடியாக துவக்க கோரி மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு சாக்காங்குடி ஊராட்சி மன்ற தலைவர் பிரபாகரன் தலைமை ஏற்றார். புவனகிரி வர்த்தக சங்க பொ.செயலாளர் இரத்தினசுப்பிரமணியன், ஊழல் எதிர்ப்பு இயக்க தலைவர் வழக்கறிஞர் குணசேகரன், சே.தோப்பு அணைக்கட்டு விவசாய சங்க நிர்வாகி சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆதிவராகநல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் ஜோதி நாகலிங்கம் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டு இயக்க மாநில பொதுச் செயலாளர் ரவீந்திரன் பங்கு பெற்று கண்டன உரை நிகழ்த்தினார். மேலும் ஆர்ப்பாட்டத்தில் முகமது ரபி, இலியாஸ் பாஷா, வசந்தி செல்வ மணிகண்டன், நாகராஜன்.

தனிகைவேல், கவிதா கண்ணன், அமிர்தவள்ளி கலியமூர்த்தி, சரண்யா ராஜேஷ் கண்ணன், மற்றும் விவசாயிகள் பொதுமக்கள் பொதுநல அமைப்புகளை சார்ந்தவர்களும் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் கடல் நீரால் பாதிக்கப்பட்டுள்ள சுற்றியுள்ள 25 கிராம மக்களின் வாழ்வாதாரத்தை காத்திட வெள்ளாற்றில் தடுப்பணை கட்டுவதற்கான வேலையை தொடங்க வேண்டி உரை நிகழ்த்தப்பட்டது. பின்னர் முடிவில் மோகன் நன்றி கூறினார்.

Registered with the Registrar of Newspapers for India, New Delhi Regn.No.**TNBIL/2003/10419**

SSP/Chennai City North Divn.
Regn.No.**TN/CCN/671/2018-20**

**PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)/WPP 533/2018-2020**

## சிறை

**அன்று...**

தண்டனை பெற்று கைதி சிறையில் இருந்து வெளியே வந்தால் கைதியை மட்டும் அல்லாது, குடும்பத்தையே ஊரைவிட்டு ஒதுக்கி வைத்த சமுதாயத்தில்,

**இன்று...**

சிறையில் இருந்து தண்டனை காலம் முடிந்து, வெளியே வந்த கைதிக்கு வரவேற்பு, வாணவேடிக்கை, முழு நேர தொலைக்காட்சி நேரலை

**இது சமுதாய சீரழிவு...**

**"இந்த நாடு திருந்தி வரும்" என்ற நம்பிக்கை இருக்கின்றதா?**
**காலம் தான் பதில் சொல்லும்...**

# நேர்மை நெறி

**ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்**

ஆசிரியர் : வி.ஆர்.சந்திரன்

இணை ஆசிரியர் : வே.கார்த்திகை ராஜன்

Permitted dates of posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) Chennai. On 12th March 2021

If Undelivered Please Return to:
**ACM, 155, KONNUR HIGH ROAD, AYANAVARAM, CHENNAI-23**

Owned by ANTI CORRUPTION MOVEMENT, CHENNAI and published on its behalf by M.RAGHUPATHY (9444896165) from : No.155, "Nambagam" Konnur High Road, Ayanavaram, Chennai - 600 023 and printed by Thiru.S.G.PARTHASARATHY, at VPS PRINTERS, No.292, T.H.Road, Chennai-600005. Editor : V.R.CHANDRAN.